# சம்ஸ்கிருத மொழியும் சர்வதேச வலைப்பின்னலும்–ஓர் ஆய்வு

சு. நவநீதகிருஷ்ணன்


### ஆய்வுச்சுருக்கம்

*(சம்ஸ்கிருதமொழி இறந்தமொழி அல்ல. அது செம்மொழியாக வாழும் மொழி, பல்வேறு மொழிகளும் வளம்மிக்க சம்ஸ்கிருதமொழியுடன் தம்மைத் தொடர்புபடுத்திப் பெருமை பெற்று வரும் இன்றைய காலகட்டத்தில் தமிழ்மொழிமூலம் தெளிவாக ஆராயப்பட வேண்டிய சம்ஸ் கிருத மொழிப்புலங்களை இனங்காட்டி நிற்கும் குறிகாட்டிகளை அறிமுகம் செய்ய முயல்வதுடன் இணையத்துடனான சம்ஸ்கிருதத்தின் புதிய போக்குகளையும் இக்கட்டுரை அறிமுகம் செய்கிறது.)*


### சம்ஸ்கிருத மொழி - அறிமுகம்

மனித வரலாற்றில் சிந்தனை முதிர்ச்சியின் விளைவால் ஏற்பட்ட கருத்துப்பரிமாற்றமே மொழிகளின் தோற்றுவாயென்ற சிந்தனை இன்று பலராலும் முன்வைக்கப்படுகிறது. மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்த மொழி வெறும் பரிமாற்று ஊடகமாக மட்டுமன்றி வேறு பல பண்பாட்டு விழுமியங்களையும் வாழ்வியற் கோலங்களையும் காலக்கண்ணாடியாகக் காட்ட வல்ல மனித வாழ்வின் பிரிக்கமுடியாத அம்சமாக மாறி வந்துள்ளமையை வரலாறு எமக்கு உணர்த்துகிறது. இவ்வகையில் உலகின் புராதன மொழிகளுள் ஒன்றான சம்ஸ்கிருதம் இந்தியாவைத் தனது தாய்நாடாகக் கொண்டிருந்த போதிலும் உலகின் பல நாடுகளிலும் பரந்து விளங்கும் சிறப்புடையது. சுமார் நாலாயிரம் ஆண்டுகால இலக்கியவளமும், தொன்று தொட்டு இன்று வரை அழியாத ஜீவசக்தியும், தெய்வீகதொடர்புடன் கூடிய தோற்றமும் இதன் பெருமையை எமக்குணர்த்தும்.[1] மேலும் இம்மொழி பிராகிருதமொழி, வைதிகமொழி, இதிஹாஸமொழி, பாணியால் செம்மைப்படுத்தப்பட்ட சம்ஸ்கிருதமொழி என்ற படிமுறையில் காலத்திற்கேற்ப புதிய பரிமாணங்களைப் பெற்று வருவதும் நன்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### சம்ஸ்கிருதத்தின் ஜீவசக்தி

உலகின் பழைமைமிக்க மொழிகள் பல வற்றுள் சிலவே காலவெள்ளத்திலே அடித்துச் செல்லப்படாது நின்று நிலைத்திருக்கும் ஜீவசக்தி மிக்கவையாக உள்ளன. அவற்றுள் ஒன்றாகக் கூறத்தக்கது சம்ஸ்கிருதமொழி. மக்களால் பேசப்படும் மொழியே வாழும் மொழி என்ற கருத்து எளிதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. ஏனெனில் பழைமைமிக்க கட்டுக்கோப்பான பல்துறைசார் இலக்கியங்களைக் கொண்ட ஒருமொழி சமகாலத்திலும் பயிலப்படும் ஒரு மொழியாகவும் சமயதத்துவரீதியில் ஆலய நிகழ்வுகளுக்குரிய ஊடகமாகவும் பல்கலைக் கழகங்கள் பலவற்றின் பட்ட, பட்டப்பின் ஆய்வுக்குரிய மொழியாகவும் உலகம் பரந்த பல மொழியூடகங்களையும் பருவ இதழ்களையும் அலங்கரிக்கும் மொழியாகவும் தகவல் தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் மொழியாகவும் மனித பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குமிக்க பண்பாட்டு மொழியாகவும் குறித்த சிலரின் தாய்மொழியாகவும் விளங்குமாயின் அம்மொழி இயல்பாக வாழும் மொழி என்ற தகுதியைப் பெற்றிருப்பதாகக் கருதுவதில் தவறேதுமில்லை. இவ்வகையில் சம்ஸ்கிருத அறிஞர்கள் பலர் இக்கருத்துடன் உடன்பாடு உடையவர்களாகவே உள்ளனர்.

**பேச்சுமொழியாக சம்ஸ்கிருதம்**

சம்ஸ்கிருதம் பேச்சுமொழியாகவும் விளங்குகிறது. பேச்சுச் சம்ஸ்கிருத வளர்ச்சிக்கு 1981இல் இந்தியாவில் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரி என்பவர் தலைமையிலான குழுவினரால் அமைக்கப்பட்ட "சம்ஸ்கிருத பாரதி" (Samskrita Bharathi) என்ற நிறுவனம் பேச்சுச் சம்ஸ்கிருத இயக்கத்தினை நடாத்திவருகிறது. இவ்வியக்கத்தின் தொடர்ச்சியான பரந்த பணிகளால் இன்று உலகில் சுமார் 2 மில்லியன் மக்கள் சம்ஸ்கிருதப் பேச்சாற்றலைக் கொண்டுள்ளனர். 25000 ஆசிரியர்கள் பேச்சுச் சம்ஸ்கிருதப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்துகின்றனர்.[2]

மேலும் இந்நிறுவனம் இந்தியாவில் மட்டும் நடாத்திய ஆய்வுகளின் படி இந்தியாவிலே 30 மில்லியன் மாணவர்கள் சம்ஸ்கிருத மொழியைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் 1500 சம்ஸ்கிருதக் கல்லூரிகள் 3500 சம்ஸ்கிருத சிறு பாடசாலைகளும் இங்கு உள்ளன. உலகளாவிய ரீதியில் 40 நாடுகளைச் சேர்ந்த 250ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் சம்ஸ்கிருத மொழி பிரதான பாடமாக பட்ட, பட்டப்பின் படிப்புகளில் இடம் பெறுகிறது. 400 பல்கலைக்கழகங்களில் துணைப்பாடமாகவோ பண்பாட்டுப்பாடமாகவோ பயிலப்படுகிறது. இந்தியாவில் மட்டும் 10 சம்ஸ்கிருதமொழிமூலப் பல்கலைக்கழகங்களும் சுமார் 250 சம்ஸ்கிருத ஆய்வு நிறுவனங்களும் உள்ளன. 80 சம்ஸ்கிருத சஞ்சிகைகள் வருடந்தோறும் வெளிவருகின்றன. மேலும் குறிப்பாக கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மத்தூர், ஹொசஹலி ஆகிய இருகிராமங்களிலும் சம்ஸ்கிருதம் தாய்மொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் விளங்குவதோடு ஜாபால்பூரிலுள்ள மொஹாகா என்ற கிராமத்து மக்களும் சம்ஸ்கிருதத்தை தமது தாய் மொழியாக பயன்படுத்தி வருகின்றனர்[3].

**பல்கலைக்கழகங்களில் சம்ஸ்கிருதம்**

பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகங்களின் ஒன்றியத்தில் அங்கத்துவ உரிமை பெற்ற பல்கலைக்கழகங்களின் விபரத்தொகுப்பேடு 2001இன் அடிப்படையில் கிடைத்த தகவல்களின்படி சம்ஸ்கிருதம் கற்பிக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை நாடுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பட்டியலிட்டு நோக்குவது பயனுடையதாக அமையும்.

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | – 49 | பெல்ஜியம் | – 02 |
| பின்லாந்து | – 01 | ஜேர்மனி | – 16 |
| டென்மார்க் | – 02 | போலந்து | – 01 |
| இலங்கை | – 05 | இத்தாலி | – 02 |
| ருஷ்யா | – 01 | பிரிட்டன் | – 05 |
| கனடா | – 01 | சுவீடன் | – 01 |
| அவுஸ்திரேலியா | –03 | ஒஸ்ரியா | – 01 |
| பங்களாதேஷ் | – 03 | நோர்வே | – 01 |
| நெதர்லாந்து | – 03 | ஜப்பான் | – 01 |
| சுவிற்ஸர்லாந்து | – 01 | | |

இவ்வகையில் பொதுநலவாய நாடுகளின் ஒன்றியத்தில் அங்கத்துவ உரிமைபெற்ற நாடுகளில் மாத்திரம் சுமார் 100 பல்கலைக்கழகங்களில் சம்ஸ்கிருதம் கற்பிக்கப்படுவதை அவதானிக்கமுடிகிறது.[4]

**புதிய சம்ஸ்கிருத ஆய்வுப்புலங்கள்**

அண்மைக்காலமாக மாற்றமடைந்து வரும் ஆய்வு நோக்கும் மொழியியல் ரீதியாலான ஆழமான ஆய்வுகளும் வேறுபல மொழிகளுடனான ஒப்பியல் ஆய்வுகளும் சம்ஸ்கிருதத்திற்குப் புதிய பரிமாணத்தை வழங்கியுள்ளன.

சம்ஸ்கிருத மயமாதற்சிந்தனை, சம்ஸ்கிருதப் பண்பாட்டுச்சிந்தனை என்பனவும் புதிய ஆய்வுப் புலங்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் சம்ஸ் கிருத இலக்கியங்களில் நிலவும் சமகால கருத் தியல்களான எதிர்காலவியல், பெண்ணியம், சமூகவியல், உளவியல் முதலிய பல்வேறு விடயங்கள் தொடர்பான ஆய்வுகளும் புதிய கணினி அறிவியல்சார் அறிமுக ஆய்வுகளும் அரங்கேறி வருகின்றன. தவிர சாதாரண மக்களிடையேயான வாழ்வியலும் சம்ஸ்கிருத மொழிலமைந்த கருத்தாழம் மிக்க பெயர்களைத் தமது குழந்தைகளுக்கு சூட்டும் மரபினடிப் படையில் மக்கட்பெயராய்வுகளும் நடைபெறு கின்றன.

**ஊடகங்களும் சம்ஸ்கிருதமும்**

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைகளில் சம்ஸ் கிருத நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன[5]. இந்தியாவின் தொலைக்காட்சி சேவையான தூரதர்ஷன் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3.00 மணிக்குச் சம்ஸ்கிருதச் செய்திகளை ஒளிபரப்புகிறது. மேலும் சம்ஸ்கிருத மொழித் திரைப்படங்களும் அண்மையில் வெளிவந்துள் ளன. 1983இல் G.V ஐயரால் தயாரிக்கப்பட்ட "ஆதிசங்கராச்சர்யா" என்ற திரைப்படமும் இதே காலப்பகுதியில் Hugo Kach என்ற மேலை நாட்டவரால் தயாரிக்கப்பட்ட "சத்யாக்ரஹ" என்ற திரைப்படமும் குறிப்பிடத்தக்கன. 1993இல் G. V. ஐயரால் தயாரிக்கப்பட்ட "பகவத் கீதை" இசை கலந்த சம்ஸ்கிருதத் திரைப்படமாக விளங்குகிறது. இவற்றை நாம் இணையத் தளங்களிலிருந்து பதிவிளக்கம் செய்து பார்வை யிட முடியும்[6].

**சம்ஸ்கிருத மாநாடுகள்**

மொழிவளர்ச்சிக்கு உறுதுணைபுரியும் சம்ஸ்கிருத மாநாடுகளும் அதிகளவில் நடை பெற்றுவருகின்றன. சர்வதேச சம்ஸ்கிருத சம் மேளனம் (IASS) 1972 முதல் உலகளாவிய ரீதியில் சம்ஸ்கிருத மாநாடுகளை ஒருங் கிணைத்து நடாத்திவருகிறது. இதுவரை 12 சம்ஸ்கிருத மாநாடுகள் நடைபெற்றுள்ளன[7].

அவை நடைபெற்ற இடங்களும் ஆண்டுகளும் பின்வருமாறு:

| உலக சம்ஸ்கிருத மாநாடு | நாடு | நகரம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1ஆவது மாநாடு | இந்தியா | New Delhi | 1972 |
| 2ஆவது மாநாடு | இத்தாலி | Torino | 1975 |
| 3ஆவது மாநாடு | பிரான்ஸ் | Paris | 1977 |
| 4ஆவது மாநாடு | இந்தியா | Varanasi | 1979 |
| 5ஆவது மாநாடு | ஜேர்மனி | Weimor | 1981 |
| 6ஆவது மாநாடு | அமெரிக்கா | Philadephia | 1984 |
| 7ஆவது மாநாடு | நெதர்லாந்து | Leiden | 1987 |
| 8ஆவது மாநாடு | ஒஸ்ரியா | Vienna | 1990 |
| 9ஆவது மாநாடு | அவுஸ்திரேலியா | Melbournse | 1994 |
| 10ஆவது மாநாடு | இந்தியா | Bangalore | 1997 |
| 11ஆவது மாநாடு | இத்தாலி | Torino | 2000 |

இறுதியாக 12ஆவது மாநாடு பின்லாந்து நாட்டின் முக்கியநகரான Helsinki யில் 2003 யூலை 14-18 வரையான காலப்பகுதியில் நடை பெற்றதும் கவனிக்கத்தக்கது[9]. மேலும் 13ஆவது மாநாடு ஸ்கொட்லாந்து நாட்டின் Edinburgh நகரில் 2006 யூலை 10-14 வரை நடைபெற வுள்ளதாக IASSஇன் இணையத்தளம் அறிவித் துள்ளது. இந்தியா போன்ற நாடுகளில் தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் பல மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இலங்கையில் யாழ்ப் பாணத்தில் திருநெல்வேலியிலமைந்த பரமேஸ் வராக் கல்லூரியில் வட இலங்கைச் சம்ஸ்கிருத சம்மேளனத்தினால் 17.01.1953இல் நடாத்தப் பட்ட சம்ஸ்கிருத மாநாடு இங்கு குறிப்பிடத் தக்கது[9].

### சம்ஸ்கிருத நூற்படைப்புக்கள்

பெருந்தொகையான சம்ஸ்கிருத நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், சஞ்சிகை கள் என்பனவும் தற்காலத்தில் வெளிவந்த வண்ணமுள்ளன. பழமையான நூல்களைப் பதிப் பித்தல் மட்டுமன்றித் தொகுப்புக்களும் புதிய ஆக்கங்களும் இடம் பெற்றுவருகின்றன. புத் தாக்கம் என்ற வகையில் இந்திய சம்ஸ்கிருத அறிஞரான வி.ராகவனால் எழுதப்பட்ட தீக்ஷிதீய மகாகாவ்யத்தைக் குறிப்பிடலாம்[10]. மேலும் இவர் பல சம்ஸ்கிருத நாடகங்களைப் படைத்த தோடமையாது அவற்றை வானொலியில் ஒலிபரப்பி விருதுகளையும் பெற்றவர். இவற்றுள் பத்து அங்கங்களைக் கொண்ட "அனார்க்கலி" என்ற நாடகம் குறிப்பிடத்தக்கது. ஈழத்தைப் பொறுத்தவரை ஆலயம் சார்ந்த நிலைமிலும் தனித்தும் பல பக்தி இலக்கிய ஆக்கங்களும் சிற்றகராதிகள் தல இலக்கியங்கள் இலக்கணப் பயிற்சி நூல்கள் என்பனவும் வெளிவந்த வண்ணம் உள்ளன. மேலும் இந்தியாவிலிருந்து வெளிவரும் சம்ஸ்கிருத சந்தாமாமா, சம்பாஷண சந்தேசம் போன்ற பருவ இதழ்களும் குறிப்பிடத் தக்கன[11].

### கணினி மொழியாக சம்ஸ்கிருதம்

கணினித்துறையில் "ஆகர்ஷன்", "அசோகா" போன்ற பல குறியீட்டுப் பெயர்களில் 20ற்கும் மேற்பட்ட கணினி எழுத்துருக்கள் (Fonts) வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் சம்ஸ் கிருத மொழிசார்ந்த கணினி மென்பொருட் களும் (Soft Wares) அறிமுகம் செய்யப்பட் டுள்ளன. இந்தியாவின் பிராந்தியமொழிகள் பதினைந்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட "Ilip" என்ற மென்பொருள் சம்ஸ்கிருத விசைப்பலகை மற்றும் சிறப்பான எழுத்துருக்கள் பலவற்றையும் உள்ளடக்கியுள் ளது. இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த Dr. சிவமூர்த்தி என்பவரால் உருவாக்கப் பட்ட "கணகாஷ்தயாயீ" (Ganakashtadhyayi) என்ற கணினி மென்பொருள் பாணினியின் அஷ்டாத்யாயீயை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது[12]. சம்ஸ்கிருத கணினியுல கின் புதியபரிமாணமாக இம்மென்பொருள் கருதப்படுகிறது.

### சம்ஸ்கிருதம் சார்ந்த இணையத்தளங்கள்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புதுமையாக விளங்குவது இணையம் என்கின்ற சர்வதேச வலைப்பின்னலாகும். இணையத்தின் வருகையைத் தொடர்ந்து தத்தம் மொழிகளில் இணையத்தளங்களை உருவாக்கி மொழிப்பரம் பலை சர்வதேச நிலைக்கு இட்டுச்செல்வதில் மொழிவல்லுனர்கள் ஆழ்ந்து ஈடுபட்டு வரு கின்றனர். இந்நிலையில் சம்ஸ்கிருதம் சார்ந்த

பல்வேறு விடயங்களை இணையத்தளங்கள் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். 2003 யூலையில் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி www. yahoo. com என்ற பிரபல இணையத் தளத்தோடு பொறியின் உதவியுடன் Sanskrit என்ற சொல்லைக் கொண்டிருக்கும். ஒரு லட்சத்து எட்டாயிரம் இணையத்தளங்கள் இனங்காணப்பட்டுள்ளன[13]. சில இணையத் தளங்கள் சம்ஸ்கிருதம் சார்ந்த இணையத் தளங்களின் விபரத்தொகுப்பாகக் காணப்படு கின்றன. இவற்றை அணுகி ஆர்வலர்கள் சம்ஸ் கிருதம் தொடர்பான இணையத் தேவையை ஓரளவிற்கு பூர்த்தி செய்து கொள்ளமுடியும். அத்தகைய தளங்களுள் பின்வருவன குறிப் பிடத்தக்கன.

- www sanskrit; gde. to/ dec
- www world language; com
- www sundaralokah. net/index
- www geocities; com

இவற்றிலுள்ள உபதலைப்புக்களைத் தேவைக் கேற்ப தெரிவுசெய்து தேவையான தளங்களை இலகுவில் சென்றடையலாம்.

**இணையமும் சம்ஸ்கிருத நிறுவனங்களும்**

உலகிலுள்ள பல்வேறு சம்ஸ்கிருத கல்வி நிறுவனங்கள், சம்ஸ்கிருதமையங்கள், சம்ஸ் கிருத ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பன தத்தம் இணையத்தளங்களூடாக சர்வதேச வலைப் பின்னலுடன் தம்மை இணைத்துக் கொண்டுள் ளன. இணையத்தினூடாக சம்ஸ்கிருத கல்வி பெறவும் ஏனைய தேவையான தகவல்களைப் பெறவும் சம்ஸ்கிருத அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு சம்ஸ்கிருதம் தொடர்பான ஐயங்களை நிவர்த்தி செய்யவும் இவை உதவுகின்றன.

இத்தகைய நிறுவனங்களுள் உலக சம்ஸ் கிருத மாநாடுகளை ஒருங்கிணைத்து நடாத்து கின்ற "International Association of Sanskrit Studies"[14] அமெரிக்காவில் இயங்கு கின்ற American Sanskrit Institute[15], இந்தியாவைச் சேர்ந்த Sanskrit Bhaarat[16] நிறுவனம், பாங்கொக்கைச் சேர்ந்த Sahitya Studies Centre[17] இந்தியாவிலியங்குகின்ற Sanskrit Religious Institute[18], Sahiya Akaddemi[19], Arsha Vidya Gurukula Institute of Sanskrit[20], ஆகிய நிறுவனங் களும் அமெரிக்காவைச் சேர்ந்த Sringeri Vidyabharat Foundation[21] என்ற நிறுவன மும் குறிப்பிடத்தக்கன.

**இணையமும் சம்ஸ்கிருத இலக்கியங்களும்**

இணையத்தளங்களிற் சில சம்ஸ்கிருத மொழியிலமைந்த வேதங்கள், இதிஹாச புரா ணங்கள், பிற்கால இலக்கியங்கள், மகா காவி யங்கள், பக்தி இலக்கியங்கள், உபநிஷதங்கள், தர்மசாஸ்திரங்கள் முதலிய பல்வேறு இலக்கியங் களை முழுமையாகவோ பகுதியாகவோ கொண் டிருக்கின்றன[22]. சிலதளங்கள் இவற்றின் மொழி பெயர்ப்புக்களையோ, விளக்கவுரைகளையோ கொண்டுள்ளன[23]. சம்ஸ்கிருதத்திலும் ஆங் கிலத்திலும் மட்டுமன்றி வேறு பலமொழிகளிலும் சம்ஸ்கிருதமொழிசார் கட்டுரைகள் மொழியியல் ஆய்வுகள் என்பன காணப்படுகின்றன.

சில தளங்கள் சம்ஸ்கிருத இலக்கியங் களை ஒலிநிலையில் உள்ளடக்கியுள்ளன[24]. இவை சம்ஸ்கிருத எழுத்து உச்சரிப்பு மற்றும் ஒலியியனியல் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றன. இவற்றுள் சிலவற்றில் சம்ஸ்